தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

வெள்ளிக்கிழமை, 1975 அக்டோபர் 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினுக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்.

Manhandling of Headmaster by Students.

* 3. Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Headmaster of the Government High School, Sukkampatti (Tiruchirappalli District) was manhandled by students on the 20th September, 1974;

(*b*) if so, the action taken thereon; and

(*c*) whether it is a fact that the President of the Local Panchayat trespassed into the premises of the school and assaulted a student, resulting in the closure of the school?

மாணவர்களால் தலைமை ஆசிரியர் மீது தாக்குதல்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுக்கம்பட்டி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) அரசினர் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் 20—9—1974 அன்று மாணவர்களால் தாக்கப்பட்டார் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

(உ) உள்ளூர் ஊராட்சித் தலைவர் பள்ளி வளவுக்குள் அனுமதியின்றி நுழைந்து ஒரு மாணவரைத் தாக்கினர் என்பதும் அதனல் பள்ளி மூடப்பட்டது என்பதும் உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி பத்திரிகைகளிலே வெளி வந்தது. தலைமையாசிரியர் மாணவர்களால் தாக்கப் பட்டதாகவும், மேலும் அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர் அந்தப் பள்ளிக்குச் சென்றதாகவும், அங்கு தகராறு செய்ததாகவும், இதனால் அந்த ஊரிலே பெரும் குழப்பம் விளைந்ததாகவும் பத்திரிகையிலே செய்தி வந்தது. அதன் அடிப்படையிலேதான் வினாவை எழுப்பினேன். அதுபற்றி மேலும் அந்த மாவட்டக் கல்வி அதிகாரி அவர்களைப் பரிசீலிக்கும்படி அரசு சொல்ல முடியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 20—9—1974 ஆம் நாளன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், சுக்கம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியைச் சேர்ந்த தலைமையாசிரியர் அவர்களின் தூண்டுதலின் பேரில்தான், அந்தக் குழப்பம் ஏற்பட்டதென்று மாவட்டக் கல்வி அலுவலருக்கு ஒரு மாணவர் தந்தி அனுப்பினார். தலைமையாசிரியர் அவர்கள் தூண்டுதலின் பேரில், அந்தக் கட்டிடக் குழுத் தலைவர் மாணவர்களைத் தாக்கியதாகவும், அதன் காரணமாக வேலை நிறுத்தம் செய்ததாகவும் ஒரு தந்தியை மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பிவைத்தார்கள். மாவட்டக் கல்வி அலுவலர், கரூர், அவர்கள் நேரடியாகச் சென்று விசாரணை நடத்தியபோது, அந்தப் பள்ளியில் ஆசிரியர்கள் இரண்டு பிரிவாகப் பிளவுபட்டிருக்கிறார்கள் என்று தெரியவந்தது. தலைமையாசிரியர் அவர்கள், ரொம்ப வேலை வாங்கிக்கொண்டிருப்பதால், அவரை அந்தப் பள்ளியிலிருந்து மாற்ற வேண்டும் என்று அங்குள்ள ஆசிரியர்களில் ஒருசாராரின் தூண்டுதலின் பேரில்தான் அது நடந்தது என்று தெரிய வந்தது. ஆனால், ஒருவருக்கொருவர் தாக்கப்படவில்லை. வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது உண்மை. யார் யார் அந்த வேலை நிறுத்தத்திற்குக் காரணமாக இருந்தார்களோ, அவர்கள் அத்தனை பேரும் அந்தப் பள்ளியிலிருந்து வேறு பள்ளிகளுக்கு உடனடியாக மாற்றப்பட்டார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : இந்தமாதிரி மாணவர்கள் ஆசிரியர்களைத் தாக்கினார்கள் என்றெல்லாம் சிற்சில இடங்களில் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. இவ்வாறு மாணவர்கள் ஆசிரியர்களை அடித்தால், உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், இவ்வாறு அடித்தவர்களில் எத்தனை மாணவர்கள் இதற்காக நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1975 அக்டோபர் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: என்ன கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது என்பதையும் அதற்கு நான் சொன்ன விடையையும் உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அந்தப் பள்ளியில் ஏற்பட்ட வேலை நிறுத்தத்தில் யாரும் தாக்கப்படவில்லை. அங்குள்ள ஆசிரியர்களிடையேதான் குழப்பம் இருந்தது. அதன் காரணமாகத்தான் வேலை நிறுத்தம் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டது. அந்த வேலை நிறுத்தத்தின் பேரில் தக்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்குக் காரணமாக இருந்தவர்கள் வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டுவிட்டார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: ஊராட்சித் தலைவர் அவர்கள் உள்ளே புகுந்து தாக்கினார்கள் என்று இருக்கிறதே, அவ்வாறு தாக்கியதற்கு அவர்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஊராட்சித் தலைவர் அவர்கள் அடிக்கவில்லை என்பது விசாரணையில் தெரிய வந்தது. ஆகவே, இதைப் பெரிதாக ஆக்கவேண்டும் என்பதற்காக தூண்டுதலின் பேரில்தான் மாணவர்கள் கூறிப்பிட்டார்களே தவிர, வேறு ஒரு தகாராறும் இல்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: இந்த மாதிரிச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக பள்ளிகள்தோறும் பெற்றோர்கள் சங்கம் வைக்க வேண்டும். அதில் பிரச்சினைகள் குறித்து பெற்றோர்களும், தலைமையாசிரியர்களும் கலந்து பேசலாம். அந்த மாதிரிச் சங்கம் அந்தப் பள்ளியில் இருந்ததா, பெற்றோர்கள் கருத்துரை கேட்கப்பட்டதா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தப் பள்ளியில் ஆசிரியர்கள்-பெற்றோர்கள் சங்கம் இருந்ததா, இல்லையா என்ற விவரக் குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் இப்போது பொதுவாக எல்லாப் பள்ளிகளிலும் பள்ளிகளினுடைய நலன் கருதியும், பள்ளிகள் சீராகவும் செம்மையாகவும் நடைபெற வேண்டுமென்பதற்காகவும் இம்மாதிரிச் சங்கங்கள் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு, மூன்று ஆண்டுகளாக 12 ஆயிரம், 13 ஆயிரம் பள்ளிகளிலே இதுபோன்ற சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிகளிலே சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு அது ஓரளவுக்குக் காரணமாக இருக்கின்றது.

திரு. கே. எஸ். கணபதி : இதுபோன்ற சங்கங்கள் பரவலாக இருந்தாலும் கூட, அந்தச் சங்கங்கள் பெயரளவிலேதான் இருக்கின்றனவே தவிர, செயல் படும் அளவுக்கு இல்லை. இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடக்கும்போது, இது பற்றிய முடிவுகள் எடுக்கும் அதிகாரம் அந்தச் சங்கங்களுக்கு இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முடிவெடுக்கும் அதிகாரம் அவர்களுக்கு வராது. ஆனால், சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்த அந்தச் சங்கம் பயன்படும். ஆசிரியர்களையும், மற்றவர்களையும் ஓரளவுக்குச் சமாதானப் படுத்த அந்தச் சங்கங்கள் பயன்படும். நன்றாக இருக்கின்ற தலைமை யாசிரியரைக்கூட, அவர் நன்றாக வேலை வாங்குகின்ற தலைமையாசிரியராக இருந் தால், எல்லோரும் ஒன்று சேர்ந்துகொண்டு, வேறு எங்காவது மாற்றிவிட வேண்டும் என்று நினைத்து, இந்த மாதிரிக் காரியங்கள் செய்கின்றார்கள். இது நிமித்தம் தேவைப்படும் முக்கியமான நடவடிக்கைகளை அதிகாரிகள்தான் எடுக்க வேண்டும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : பெற்றோர்கள் சங்கங்களுக்கு அந்த மாதிரி முடிவெடுக்கும் உரிமைகள் கொடுத்தால், அவர்கள் அதை வைத்துச் செயல்பட வாய்ப்பு இருக்கும். ஆகவே, அது எவ்வாறு செயல்படலாம் என்று நடைமுறைப்படுத்த அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் பள்ளியினுடைய வளர்ச்சி பற்றிய சூழ்நிலையைக் கவனித்துக்கொள்ள கருத்துக்கள் சொல்ல முடியும். ஆனால் இப்படிப்பட்ட வகைகளிலே என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குறிப்புக்களைத் திரட்டி வைத்து ஆராய்ந்து, ஒரு முடிவு எடுக்கும் வாய்ப்பு ஏற்படாது. ஆனால் நடைமுறையில் ஒரு பள்ளியினுடைய வளர்ச்சிக்கு கருத்துக்கள், அறிவுரைகள் வழங்குகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முடியும்.

Opening of Girls' School at Tiruparankundram, Madurai.

* 4. Q.—Thiru K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the teachers of a Girls' High School at Tirunagar, Madurai, requesting the Government not to grant permission to open a new Girls' School at Tiruparankundram, Madurai; **and**

(*b*) if so, the action taken thereon?